DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure.)
IN THE COURT OF IV ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE
TIRUNELVELI

| | | |
|---|---|---|
| Calendar | .. .. | S.C.250/2021 |
| Miscellaneous | .. .. | |
| Preliminary Register | .. .. | |
| Sessions | .. .. | |

Deposition of Witness for PW-4 — Prosecution / Defence / Court

| | | |
|---|---|---|
| Name | : | நாராயணமூர்த்தி |
| Father's Name | : | கிருஷ்ணன் |
| Village | : | தாதனூத்து |
| Taluk | : | தாழையுத்து |
| Calling | : | |
| Age | : | 35 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 13th day of November 2025.

1 , 2 எதிரிகள் ஆஜர். எதிரிகள், வழக்கறிஞர்கள் ஆஜர்.

முதல் விசாரணை :-

நான் தாதனூத்து ஊரில் குடியிருந்து வருகிறேன். நான் லாரி ஓட்டுநராக பணிபுரிந்து வருகிறேன். இந்த வழக்கில் இறந்துபோன கல்லத்தியானை எனக்கு தெரியும். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். 25.07.2020ம் தேதியன்று நான் வேலைக்கு சென்றுவிட்டு வீட்டிற்கு வரும்போது காலை 10.00 மணியளவில் தாதனூத்து பஸ்டாண்டில் கல்லத்தியான் பைக்குடன் நின்று

கொண்டிருந்தார். கல்லத்தியான் ஒரு பழைய காரை பார்க்க வேண்டும் என்று என்னை அழைத்தார். நானும், அவரும் கார் பார்க்க கல்லத்தியான் பைக்கில் தாழையுத்து பக்கம் உள்ள இபி ஸ்டாப் பக்கம் சென்றோம். அங்கு பழைய காரை பார்த்தோம். காரின் உரிமையாளருக்கு போன் செய்து பார்த்தபோது போன் அவருக்கு கிடைக்கவில்லை. பிறகு நானும், கல்லத்தியானும் வ.உ.சி.நகர் பக்கத்தில் உள்ள டாஸ்மாக் கடையில் இருந்து மது வாங்கிவிட்டு வந்து வ.உ.சி.நகரில் இருந்து ICL சிமெண்ட் பேக்டரிக்கு வரும் வழியில் இசக்கியம்மன் கோவில் அருகே வைத்து நாங்கள் இருவரும் மது அருந்தினோம். கல்லத்தியான் பீர் குடித்தார். நான் பிராந்தி அருந்தினேன். அதன்பிறகு என்னை எனது ஊரில் விடுவதற்காக பைக்கில் எங்கள் ஊர் தாதனுாத்து பஸ்டாண்ட் வரை கல்லத்தியான் பைக்கில் என்னை அழைத்து வந்தார். அங்கு என்னை இறக்கிவிட்டுவிட்டு பழைய காரை பற்றி பேசிக்கொண்டிருந்தோம். அப்போது அங்கு எதிரி அஜய் வந்தார். கல்லத்தியான் பைக் சாவியை பிடுங்கி பைக்கை தள்ளிவிட்டார். அஜய்க்கு பின்னால் ரகு வந்தார். ரகுவை பார்த்தவுடன் கல்லத்தியான் பயந்துபோய் எங்கள் ஊர் பம்ப்ஹவுஸ் பக்கமாக ஓடினார். நான் பயத்தில் எங்கள் ஊர் பஸ்டாண்டில் இருந்து கொஞ்சம் தள்ளிபோய்விட்டேன். யாரிடமாவது இந்த சம்பவத்தை சொல்ல வேண்டும் என்று ஊருக்குள் செல்ல பார்த்தேன். அப்போது ரகுவின் அம்மாவும், செந்தில்கணேஷ் என்ற மூர்த்தியும் எங்கள் ஊர் கிரிக்கெட் கிரவுண்டில் நின்று

கொண்டிருந்தார்கள். மூர்த்தியையும், ரகுவின் அம்மாவையும் பார்த்தவுடன் நான் பயந்துபோய் திரும்பி எங்கள் ஊர் பஸ்டாண்டிற்கே சென்றுவிட்டேன். நான் அவ்வாறு திரும்பி செல்லும்போது எனது வண்டியின் உரிமையாளர் மகாராஜன் வந்தார். அவருடன் ஏறி நான் அலுவலகத்திற்கு சென்றேன். கொஞ்ச நேரம் கழித்து கல்லத்தியான் இறந்துவிட்டதாக நான் தகவல் தெரிந்து கொண்டேன். இது சம்பந்தமாக போலீசார் என்னை மறுநாள் விசாரித்தார்கள்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

நான் தாதனூத்து காலனி தெருவில் குடியிருக்கிறேன். 1ம் எதிரியுடன் சேர்த்து உடன்பிறந்தவர்கள் 3 பேர்கள் என்றால் சரிதான். 3 பேருமே நன்கு படித்தவர்கள் என்றால் சரிதான். 1ம் எதிரியின் மூத்த சகோதரர் அரசாங்க வேலை பார்த்து வருகிறார் என்றால் சரிதான். 1ம் எதிரியும் அவரது மற்றொரு சகோதரரும் வெளியூரில் நல்ல வேலை பார்த்து வருகிறார்கள் என்றால் அவர்கள் வெளியூரில் வேலை பார்ப்பது தெரியும், ஆனால் என்ன வேலை என்று எனக்கு தெரியாது. 1ம் எதிரியின் அப்பா, அம்மாவிற்கு ஊரில் நிறைய விவசாய நிலங்கள் உள்ளது என்றால் சரிதான். 1ம் எதிரியின் தகப்பனார் இறந்தபிறகு அவரது தாயார் ஊரில் உள்ள விவசாய நிலங்களை ஒப்படைத்துவிட்டு வெளியூர் சென்றுவிட்டார் என்றால் அந்த விபரம் எனக்கு தெரியாது. தாதனூத்து கிராமம் 50 வீடுகள் இருக்கும் சின்ன கிராமம் என்றால் 50ல் இருந்து 100 வீடுகள் இருக்கும். நான் பிறந்ததில் இருந்து அந்த ஊரில்தான் வசித்து வருகிறேன். 1ம் எதிரி மற்றும் அவரது

சகோதரர்கள் ஊரில் ஏதாவது விசேத்திற்கு மட்டும்தான் வருவார்கள் என்றும், மற்ற சமயங்களில் அவர்கள் தங்கள் குடும்பத்துடன் வெளியூரில் குடியிருந்து வருகிறார்கள் என்றால் சரிதான். இறந்துபோன கல்லத்தியான் எனக்கு துாரத்து சொந்தம், அவர் எனக்கு மாமாமுறை. இறந்துபோன கல்லத்தியானுக்கு குடிபழக்கம் உண்டா என்றால் குடிபழக்கம் உண்டு, ஆனால் அவர் பெரிய குடிகாரர் கிடையாது. இறந்துபோன கல்லத்தியான் மீது கொலை வழக்கு மற்றும் திருட்டு வழக்கு உண்டா என்றால் அந்த விபரங்கள் எனக்கு தெரியாது. நான் கல்லத்தியானுக்கு உறவினர் என்பதால் நீதிமன்றத்தில் உண்மையை மறைத்து பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. கல்லத்தியான் இறக்கும்போது ஒரு ஜாதி கட்சியில் மாவட்ட தலைவராக இருந்தாரா என்றால் அவர் ஒரு கட்சியில் இருந்தார். அது ஜாதி கட்சியா என்னவென்று எனக்கு தெரியாது. அவர் கட்சியில் வகித்த பொறுப்பும் எனக்கு தெரியாது. அடிக்கடி கல்லத்தியான் தாதனுாத்துார் பகுதியில் கட்சி சார்பாக பேனர் வைப்பார் என்றால் அதை நான் பார்த்ததில்லை. தாதனுாத்து, தாழையுத்து மற்றும் பக்கத்தில் உள்ள துறையூர் ஆகிய கிராமங்களில் ஜாதி கலவரம் நடந்தது என்றால் அவ்வாறு ஜாதி கலவரம் நடந்ததாக கேள்விபட்டேன். நான் குறிப்பிட்ட 25.07.2020ல் தமிழ்நாட்டில் கொரோனா பரவல் உச்சகட்டத்தில் இருந்த நேரம் என்றால் சரிதான். அப்போது தமிழ்நாட்டில் முழு ஊரடங்கு அமலில் இருந்தது என்றால் சரிதான். தாதனுாத்து பேருந்து நிறுத்தமானது திருநெல்வேலி–மதுரை

செல்லும் ரோட்டின் மேல்பக்கம் மற்றும் கீழ்பக்கம் என இரண்டு பேருந்து நிறுத்தங்கள் உள்ளது என்றால் சரிதான். திருநெல்வேலி– மதுரை நான்குவழிச்சாலையில் இருந்து 100 அடி மேற்கு திசையில் தாழையுத்து காவல் நிலையம் உள்ளது என்றால் சரிதான். தாதனூத்து பஸ்டாப்பிற்கும், தாழையுத்து காவல் நிலையத்திற்கும் இடையே 200, 300 அடி தொலைவு இருக்குமா என்றால் 1/2 கி.மீ. தொலைவு இருக்கும். தாதனூத்து பஸ்டாப்பில் இருந்து தாதனூத்து ஊர் 1 கிமீ தொலைவில் உள்ளது என்றால் 1 கிமீ.க்கும் சற்று குறைவான தொலைவில் இருக்கும். மெயின்ரோட்டிற்கு கீழ்பக்கமாக தாதனூத்து ஊர் உள்ளது என்றால் சரிதான். சிமெண்ட் பேக்டரியின் காம்பவுண்ட் சுவரில் இருந்து 1/2 கிமீ கீழ்பக்கமாக இருந்து நானும், இறந்துபோன கல்லத்தியானும் மது அருந்தினோம். நாங்கள் இருவரும் மது அருந்தும்போது மதியம் 1.30 மணியிருக்கும். நான்குவழிச்சாலையின் ரோட்டின் கீழ்பக்கமாக ICL கம்பெனிக்கு சொந்தமான முள்காடு உள்ளது என்றால் சரிதான். அந்த முள்காடானது ரோட்டில் இருந்து ஆரம்பித்து 2, 3 கிமீ கிழக்கே வரைக்கும் அடர்ந்த முள்காடு உள்ளது என்றால் சரிதான். ரோட்டில் இருந்து 10, 15 அடி பள்ளத்தில் முள்காடு உள்ளது என்றால் 5, 6 அடி அளவு பள்ளத்தில் முள்காடு உள்ளது. நாங்கள் பஸ்டாண்டில் பேசிக்கொண்டிருந்தபோது அங்கு யாரும் இல்லை என்றால் 4, 5 பேர் அங்கு இருந்தார்கள், அவர்கள் யார் என்று எனக்கு தெரியாது. அது பஸ் போக்குவரத்து முழுவதும் கொரோனா நிறுத்தமாக நிறுத்தப்பட்டிருந்தது என்றால் சரிதான். வீட்டைவிட்டு

வெளியே செல்லக்கூடாது என்று உத்தரவிட்டிருந்த நேரம் என்றால் சரிதான். ஆனால் ஆட்கள் வெளியே சென்றுகொண்டுதான் இருந்தார்கள். பஸ்டாண்டில் நின்றுகொண்டிருந்ததாக கூறப்படும் 5, 6 நபர்கள் எங்கள் ஊரைச்சேர்ந்தவர்கள் அல்ல என்றால் எங்கள் ஊரைச்சேர்ந்தவர்கள்தான். ஆனால் அவர்களது முகம் எனக்கு சரியாக தெரியவில்லை. நானும், கல்லத்தியானும் அதிக போதையில் இருந்ததால் எங்களுக்கு சுற்றி யார் இருந்தார்கள் என்ற விபரம் தெரியவில்லை என்றால் சரியல்ல. பழைய கார் பார்ப்பதற்காக இபி பஸ்டாப் பக்கம் நானும், கல்லத்தியானும் சென்றோம் என்றும், அங்கிருந்து பழைய காரை பார்த்துவிட்டு உரிமையாளருக்கு போன் செய்து பார்த்தோம் போன் கிடைக்கவில்லை என்ற விபரத்தை போலீஸ் வாக்குமூலத்தில் நான் கூறவில்லை என்றால் சரியல்ல. என்னை எனது ஊரில் விடுவதற்காக பைக்கில் எங்கள் ஊர் தாதனூத்து பஸ்டாண்ட் வரை கல்லத்தியான் பைக்கில் என்னை அழைத்து வந்தார் என்ற விபரத்தை போலீஸ் விசாரணையில் கூறவில்லை என்றால் சரியல்ல. அங்கு என்னை இறக்கிவிட்டுவிட்டு பழைய காரை பற்றி பேசிக்கொண்டிருந்தோம் என்றும், அஜய்க்கு பின்னால் ரகு வந்தார் என்றும், நான் பயத்தில் எங்கள் ஊர் பஸ்டாண்டில் இருந்து கொஞ்சம் தள்ளிபோய்விட்டேன் என்றும், யாரிடமாவது இந்த சம்பவத்தை சொல்ல வேண்டும் என்று ஊருக்குள் செல்ல பார்த்தேன் என்றும், அப்போது ரகுவின் அம்மாவும், செந்தில்கணேஷ் என்ற மூர்த்தியும் எங்கள் ஊர்

கிரிக்கெட் கிரவுண்டில் நின்று கொண்டிருந்தார்கள் என்றும், மூர்த்தியையும், ரகுவின் அம்மாவையும் பார்த்தவுடன் நான் பயந்துபோய் திரும்பி எங்கள் ஊர் பஸ்டாண்டிற்கே சென்றுவிட்டேன் என்று முதல் விசாரணையில் கூறியதை போலீஸ் விசாரணையில் கூறவில்லை என்றால் சரியல்ல. ஊருக்கு போய் தகவலை சொல்ல முடியாத நிலையில் பக்கத்தில் இருந்த காவல் நிலையத்திற்கு சென்று தகவல் சொல்ல வேண்டும் என்று எனக்கு தோன்றியதா என்றால் பயத்தில் எனக்கு ஒன்றும் தோன்றவில்லை. பஸ்டாண்டில் நின்ற நபர்களிடம் இறந்துபோன கல்லத்தியானை எதிரிகள் விரட்டி சென்ற விபரத்தை கூறினீர்களா என்றால் அதற்குள் எனது முதலாளி மகாராஜன் வந்தார். அவருடன் நான் சென்றுவிட்டேன். மகாராஜனின் சொந்த ஊரும் தாதனூத்துதான். அவரது தகப்பனார் பெயர் பெருமாள். அவர் அம்மன்கோவில் தெருவில் குடியிருந்து வருகிறார். மகாராஜனை விசாரித்தால் அவர் உண்மையிலேயே அங்கு வந்தாரா, என்னை அழைத்து சென்றாரா போன்ற விபரங்கள் தெரியவரும் என்றால் சரிதான். நானும், இறந்துபோன கல்லத்தியானும் தாதனூத்து பஸ்டாப்பில் இருந்து பேசிக்கொண்டிருந்ததாக கூறுவது பொய் என்றால் சரியல்ல. நாங்கள் பேசிக்கொண்டிருக்கும்போது அஜய் முதலில் வந்தார், பின்பு ரகு வந்தார் என்று நான் கூறியது உண்மை இல்லை என்றால் சரியல்ல. நானும், இறந்துபோன கல்லத்தியானும் ICL பம்ப்ஹவுசில் வைத்து மது அருந்திவிட்டு மதுபோதையின் ஆளுமையில் நாங்கள் இருவரும்

இருந்தோம் என்றால் சரியல்ல. அந்த நேரத்தில் அங்கு வந்த கல்லத்தியானின் எதிரிகளான மர்மநபர்கள் அவரை தாக்கி கொலை செய்துவிட்டு சென்றுவிட்டார்கள் என்றால் கல்லத்தியானை யார் கொன்றார்கள் என்று எனக்கு தெரியாது. ஆனால் அவரை எதிரிகள் விரட்டினார்கள். எதிரிகள் அவரை விரட்டியதாக நான் குறிப்பிடுவது உண்மையில்லை என்றால் சரியல்ல. நான் காவல் நிலையத்திற்கு சம்பவம் நடந்து 2 நாட்கள் கழித்து சென்றேன். நான் முதல் விசாரணையில் கூறிய விபரங்கள் உண்மை இல்லை என்றும், நான் கல்லத்தியானுக்கு உறவினர் என்பதால் உண்மையை மறைத்து பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>மறு விசாரணை</u>

இல்லை

Sd/- C.Kathiravan,
IV Additional Sessions Judge,
Tirunelveli.

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure.)
IN THE COURT OF IV ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE
TIRUNELVELI

| | | |
|---|---|---|
| Calendar .. .. | } | S.C.250/2021 |
| Miscellaneous .. .. | | |
| Preliminary Register .. .. | | |
| Sessions .. .. | | |

Deposition of Witness for PW-5 { Prosecution / Defence / Court

| | | |
|---|---|---|
| Name | : | கங்கா |
| Father's Name | : | முருகன் |
| Village | : | தாதனூத்து |
| Taluk | : | தாழையுத்து |
| Calling | : | |
| Age | : | 27 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 13th day of November 2025.

1 , 2 எதிரிகள் ஆஜர். எதிரிகள், வழக்கறிஞர்கள் ஆஜர்.

<u>முதல் விசாரணை</u> :-

நான் தாதனூத்து ஊரில் குடியிருந்து வருகிறேன். இறந்துபோன கல்லத்தியான எனது மாமா மகன். 25.07.2020 ம் தேதியன்று நானும், எனது உறவினரான ஜெயா அக்காவும் தாழையுத்து செல்வதற்காக பகல் 1.30 மணியில் இருந்து 1.45 மணியளவில் தாதனூத்து பஸ்டாப்பில் நின்று கொண்டிருந்தோம். அப்போது எங்களுக்கு எதிரே இருந்து இருசக்கர வாகனத்தில்

கல்லத்தியானும், நாராயணமூர்த்தியும் வந்தார்கள். எங்களை பார்த்ததும் பைக்கை நிறுத்திவிட்டு எங்களிடம் பேச வருவதற்கு முன்பாக அஜய் என்ற சுடலைகண்ணு பஸ்டாப்பிற்கு பின்புறம் இருந்து ஓடிவந்து கல்லத்தியான் வந்த பைக் சாவியை பிடுங்கிவிட்டு உன்னை கொல்லாமல் விடமாட்டேன் என்று கூறி பைக்கை தள்ளிவிட்டார். இதில் கல்லத்தியான் கீழே விழுந்துவிட்டார். அவர் எழுந்திருப்பதற்கு முன்பாக ரகுநாத் ஓடிவந்தார். அதை பார்த்ததும் கல்லத்தியான் மோட்டார் பம்புஷெட் இருக்கும் இடத்தை நோக்கி ஓடினார். எதிரிகள் இருவரும் அவருக்கு பின்னால் ஓடினார்கள். இந்த விபரத்தை சொல்வதற்காக ஊருக்கு நானும், எனது அக்கா ஜெயாவும் வந்தோம். அவ்வாறு ஊருக்கு வந்து கொண்டிருக்கும்போது இசக்கியம்மன் கோவிலுக்கு எதிரே உள்ள கிரிக்கெட் கிரவுண்டிற்கு பக்கவாட்டில் இருக்கும் 4 வாகை மரங்களுக்கு பின்னால் இருந்து அன்னத்தாய், மூர்த்தி என்ற செந்தில்கணேஷ் ஆகியோர் ஓடினார்கள். இதையும் நாங்கள் பார்த்துவிட்டு ஊருக்கு சென்று எங்கள் மாமா பையன் கருப்பசாமியிடம் கல்லத்தியானை எதிரிகள் விரட்டி சென்ற விபரத்தை கூறினோம். கருப்பசாமி இருசக்கர வாகனத்தில் கல்லத்தியானின் தம்பி ஆறுமுகத்தை அழைப்பதற்காக சென்றார். கல்லத்தியானை இருவரும் விரட்டிக்கொண்டு வந்த முள்பாதையில் வந்தால் சுடுகாட்டு ரோட்டிற்குதான் செல்ல முடியும் என்றும் கருதி இருவரும் சுடுகாட்டு பாதையில் கல்லத்தியானை தேடி சென்றதாக கல்லத்தியானின் மனைவி கூறினார்கள். அதன்பிறகு கல்லத்தியான்

மனைவி, ஜெயாஅக்கா, நான் மற்றும் கல்லத்தியானின் பெற்றோர்கள் சுடுகாட்டு ரோட்டில் சென்றோம். எனக்கு முன்பாக கல்லத்தியானின் மனைவியும், அவரது பெற்றோர்களும் சென்றுவிட்டார்கள். எனது காலில் முள் குத்தியதால் நானும், ஜெயா அக்காவும் தோழர் தோட்டத்தில் நின்றோம். நானும், ஜெயாவும் நின்று கொண்டிருந்த இடத்திற்கு கருப்பசாமியும், ஆறுமுகமும் பைக்கில் மீண்டும் வந்தார்கள். ரகுநாதனும், அஜய்யும், கருப்பசாமி மற்றும் ஆறுமுகத்திடம் இப்பதான் உனது அண்ணனை கொன்றுவிட்டு வந்தோம் என்று கூறியதாக கருப்பசாமி என்னிடம் கூறினார். ஆறுமுகத்திற்கு அடிபட்டிருக்கிறது கார் எடுக்கப்போவதாக வீட்டை நோக்கி சென்றார்கள். ஆறுமுகம் அடிபட்ட இடத்திற்கும், நாங்கள் இருந்த இடத்திற்கம் 50 அடி தொலைவு இருக்கும். அங்கு 5 நபர்கள் இருந்தார்கள். ஆனால் அவர்களை அடையாளம் எனக்கு தெரியவில்லை. அடிபட்ட ஆறுமுகத்தை அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள். பிறகு கல்லத்தியான் இறந்துபோனதாக கேள்விபட்டேன். அவரது பற்கள் உடைக்கப்பட்டிருந்தது. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

நான் பி.இ., படித்துள்ளேன். இறந்துபோன கல்லத்தியானின் தாய்மாமா மகள் நான் என்றால் சரிதான். 1ம் எதிரியின் தகப்பனார் சாமிநாதன், கல்லத்தியானால் கொலை செய்யப்பட்டார் என்றால் அப்போது நான் ஹாஸ்டலில் தங்கி

படித்துக்கொண்டிருந்தேன். மேற்படி விபரத்தை நான் கேள்விபட்டு தெரிந்து கொண்டேன். இறந்துபோன கல்லத்தியான் மீது கோயில் உண்டியலை உடைத்து திருடியதாக வழக்கு இருந்த விபரம் எனக்கு தெரியும் என்றால் சரிதான். கல்லத்தியான் ஒரு ஜாதி கட்சியில் இருந்து செயல்பட்டு வந்தார் என்றால் அது எனக்கு தெரியாது. சாமிநாதன் இறந்தபிறகு 1ம் எதிரியின் குடும்பத்தாருக்கும், கல்லத்தியானின் குடும்பத்தாருக்கும் பேச்சுவார்த்தை கிடையாது என்றால் சரிதான். சாமிநாதன் இறந்தபிறகு நானும், எனது பெற்றோர்களும் 1ம் எதிரி குடும்பத்தாரோடு பேசிக்கொள்ள மாட்டோம் என்றால் சரிதான். தாதனூத்து ஊரில் முள்காட்டுபகுதி மற்றும் சூடுகாட்டு ரோடுபகுதி இரண்டும் வெவ்வேறானவை என்றால் சரிதான். கல்லத்தியான் இறந்தபிறகு எப்போது என்னை போலீசார் விசாரித்தார்கள் என்றால் போலீசார் விசாரித்திருக்கலாம், ஆனால் 5 வருடங்கள் ஆகிவிட்டதால் தற்போது ஞாபகமில்லை. தாழையுத்து காவல் ஆய்வாளர் இந்த வழக்கு சம்பந்தமாக என்னை நேரில் பார்த்து விசாரிக்க வந்தாரா என்று எனக்கு ஞாபகமில்லை என்றால் சரிதான். கல்லத்தியான் இறந்தபிறகு நான் தாழையுத்து காவல் நிலையத்திற்கு செல்லவில்லை. நான் தாழையுத்து காவல் நிலைய ஆய்வாளரிடம் வாக்குமூலம் கொடுத்தேனா, இல்லையா என்று எனக்கு தற்போது தெரியாது என்றால் சரிதான். கல்லத்தியான் இறந்தபிறகு தற்போது நீதிமன்றத்தில்தான் முதன்முதலாக அதுபற்றி கூறுகிறேன் என்றும், இடைபட்ட காலகட்டத்தில் நான் எந்த அதிகாரியிடமும் அதுபற்றி

கூறவில்லை என்றால் சரிதான். 25.07.2020ம் தேதி கொரோனா பரவல் உச்ச கட்டத்தில் இருந்த நேரம் என்றால் சரிதான். தமிழ்நாடு முழுவதும் ஊரடங்கு போடப்பட்டிருந்தது என்றால் சரிதான். பேருந்துகள் நிறுத்தப்பட்டிருந்தது என்றால் சரிதான். சாட்சி பிறகு ஞாயிற்றுகிழமை மட்டும்தான் ஊரடங்கு போட்டிருந்தார்கள் என்றும், சம்பவதினமான சனிக்கிழமை ஊரடங்கு இல்லை என்று கூறுகிறார். நான் அவ்வாறு கூறுவது உண்மை இல்லை என்றும், 25.07.2020ம் தேதி முழு ஊரடங்கு அமலில் இருந்தது என்றும், பேருந்துகள் ஓடவில்லை என்றாலும் சரியல்ல. அதனால் நானும், எனது அக்கா ஜெயாவும் 25.07.2020ம் தேதி பகல் 1.30–1.45 மணியளவில் தாதனூத்து பஸ்டாப்பில் நின்று கொண்டிருந்ததாக குறிப்பிடுவது உண்மை இல்லை என்றால் சரியல்ல. பைக்கை நிறுத்திவிட்டு கல்லத்தியான் எங்களிடம் பேச வருவதற்கு முன்பாக அஜய் பஸ்டாப்பிற்கு பின்புறம் இருந்து ஓடிவந்து உன்னை கொல்லாமல் விடமாட்டேன் என்று கூறி பைக்கை தள்ளிவிட்டான் என்று நான் கூறுவது உண்மையில்லை என்றால் சரியல்ல. மேற்படி விபரங்களை நான் நீதிமன்றத்தில் கூறுவதற்கு முன்பாக வேறு யாரிடமாவது கூறினேனா என்றால் நான் இதற்கு முந்தைய விசாரணைக்கு நீதிமன்றத்திற்கு வந்திருந்தபோது போலீசார் என்னிடம் ஒரு நகல் கொடுத்தார்கள். அதை படித்து பார்த்தபோதுதான் நான் அவ்வாறு போலீஸ் விசாரணையில் கூறியது ஞாபகத்திற்கு வந்தது. கல்லத்தியான் கீழே விழுந்துவிட்டார் என்றும், அவர் எழும்புவதற்கு

முன்பாக ரகுநாத் ஓடிவந்தார் என்று நான் குறிப்பிடுவது உண்மையில்லை என்றால் சரியல்ல. எதிரிகள் இருவரும் கல்லத்தியானின் பின்னால் ஓடினார்கள் என்று நான் கூறுவது உண்மை இல்லை என்றால் அது சரியல்ல. கிரிக்கெட் கிரவுண்டிற்கு பக்கவாட்டில் இருந்த 4 வாகை மரங்களுக்கு பின்னால் இருந்து அன்னத்தாய் மற்றும் மூர்த்தி என்ற செந்தில்கணேஷ் ஓடினார்கள் என்று நான் கூறுவது பொய் என்றால் சரியல்ல. இதை பார்த்துவிட்டு ஊருக்கு சென்று கருப்பசாமியிடம் நான் கூறியதாக சொல்வதும் உண்மை இல்லை என்றால் சரியல்ல. பஸ்டாப்பில் எங்கள் இருவரை தவிர எங்கள் ஊரைச்சேர்ந்த வேறு யாரும் இருக்கவில்லை. கருப்பசாமி இருசக்கர வாகனத்தில் கல்லத்தியானின் தம்பி ஆறுமுகத்தை அழைப்பதற்காக சென்றார் என்று நான் கூறுவது உண்மை இல்லை என்றால் சரியல்ல. அதன்பிறகு கல்லத்தியான் மனைவி, ஜெயாஅக்கா, நான் மற்றும் கல்லத்தியானின் பெற்றோர்கள் சுடுகாட்டு ரோட்டில் சென்றோம் என்றும், எனக்கு முன்பாக கல்லத்தியானின் மனைவியும், அவரது பெற்றோர்களும் சென்றுவிட்டார்கள் என்றும், எனது காலில் முள் குத்தியதால் நானும், ஜெயா அக்காவும் தோழர் தோட்டத்தில் நின்றோம் என்றும், நானும், ஜெயாவும் நின்று கொண்டிருந்த இடத்திற்கு கருப்பசாமியும், ஆறுமுகமும் பைக்கில் மீண்டும் வந்தார்கள் என்றும், ரகுநாதனும், அஜய்யும், கருப்பசாமி மற்றும் ஆறுமுகத்திடம் இப்பதான் உனது அண்ணனை கொன்றுவிட்டு வந்தோம் என்று கூறியதாக கருப்பசாமி

என்னிடம் கூறினார் என்பதும் உண்மை இல்லை என்றால் சரியல்ல. சாட்சி மீண்டும் இருசக்கர வாகனத்தில் கருப்பசாமி மட்டும் திரும்பி வந்ததாக கூறுகிறார். என்னிடம் காண்பிக்கப்படும் வாக்குமூலத்தில் தாதனூத்து பஸ்டாப்பில் பகல் 1.30 மணியில் இருந்து 1.45 மணியளவில் நானும், ஜெயாவும் நின்று கொண்டிருந்தோம் என்பது இல்லை என்றால் சரிதான். அப்போது எங்களுக்கு எதிரேயிருந்து இருசக்கர வாகனத்தில் கல்லத்தியானும், நாராயணமூர்த்தியும் வந்தார்கள் என்ற விபரம் என்னிடம் காண்பிக்கப்படும் எனது வாக்குமூலத்தில் இல்லை என்றால் சரிதான். எங்களை பார்த்ததும் பைக்கை நிறுத்திவிட்டு எங்களிடம் பேச வருவதற்கு முன்பாக அஜய் என்ற சுடலைகண்ணு பஸ்டாப்பிற்கு பின்புறம் இருந்து ஓடிவந்து உன்னை கொல்லாமல் விடமாட்டேன் என்று கூறி பைக்கை தள்ளிவிட்டதாக என்னிடம் காண்பிக்கப்படும் எனது வாக்குமூலத்தில் இல்லை என்றால் சரிதான். என்னிடம் காண்பிக்கப்படும் எனது விசாரணை வாக்குமூலத்தில் உள்ள விபரங்கள் நான் கூறியபடி இல்லை. இந்த வாக்குமூலத்தில் உள்ளவாறு நான் கூறவும் இல்லை. கல்லத்தியான கீழே விழுந்துவிட்டார் அவர் எழுந்திருப்பதற்கு முன்பாக ரகுநாத் ஓடிவந்தார் என்ற விபரம் என்னிடம் காண்பிக்கப்படும் எனது வாக்குமூலத்தில் இல்லை என்றால் சரிதான். நானும், அக்கா ஜெயாவும் ஊருக்கு வந்து கொண்டிருக்கும்போது இசக்கியம்மன் கோவிலுக்கு எதிரே உள்ள கிரிக்கெட் கிரவுண்டிற்கு பக்கவாட்டில்

இருக்கும் 4 வாகை மரங்களுக்கு பின்னால் இருந்து அன்னத்தாய், மூர்த்தி என்ற செந்தில்கணேஷ் ஓடினார்கள் என்ற விபரம் என்னிடம் காண்பிக்கப்படும் எனது வாக்குமூலத்தில் இல்லை என்றால் சரிதான். நான் கருப்பசாமியிடம் சென்று கல்லத்தியானை விரட்டி சென்றதாக கல்லத்தியானின் பெயர் குறிப்பிட்டு என்னிடம் காண்பிக்கப்படும் எனது வாக்குமூலத்தில் இல்லை என்றால் சரிதான். ஆனால் கல்லத்தியானின் குடும்பம் என்பது கருப்பசாமியையும் குறிக்கும். கல்லத்தியான் மனைவி, ஜெயா அக்கா, நான் மற்றும் கல்லத்தியானின் பெற்றோர்கள் சூடுகாட்டு ரோட்டில் சென்றோம் என்றும், எனக்கு முன்பாக கல்லத்தியானின் மனைவியும், அவரது பெற்றோர்களும் சென்றுவிட்டார்கள் என்றும், எனது காலில் முள் குத்தியதால் நானும், ஜெயா அக்காவும் தோழர் தோட்டத்தில் நின்றோம் என்றும், நானும், ஜெயாவும் நின்று கொண்டிருந்த இடத்திற்கு கருப்பசாமியும், ஆறுமுகமும் பைக்கில் மீண்டும் வந்தார்கள் என்றும், ரகுநாதனும், அஜய்யும் கருப்பசாமி மற்றும் ஆறுமுகத்திடம் இப்பதான் உனது அண்ணனை கொன்றுவிட்டு வந்தோம் என்று கூறியதாக கருப்பசாமி என்னிடம் கூறினார் என்ற விபரம் என்னிடம் காண்பிக்கப்படும் எனது வாக்குமூலத்தில் இல்லை என்றால் சரிதான். கருப்பசாமி மட்டும்தான் திரும்பி வந்தார். நான் கூறியதுபோல் என்னிடம் காண்பிக்கப்படும் வாக்குமூலம் இல்லை. ஆறுமுகம் அடிபட்ட இடத்திற்கும், நாங்கள் நின்று கொண்டிருந்த இடத்திற்கும் 50 அடி தொலைவு இருக்கும் என்று முதல் விசாரணையில் கூறியது

என்னிடம் காண்பிக்கப்படும் வாக்குமூலத்தில் இல்லை என்றால் சரிதான். இறந்துபோன கல்லத்தியான் எனது தாய்மாமா மகன் என்பதாலும், 1ம் எதிரியின் தகப்பனார் கொலை வழக்கில் கல்லத்தியான் எதிரியாக சேர்க்கப்பட்டதாலும், ஏற்கனவே இருந்த பகை உணர்ச்சியை வைத்து எதிரிகளுக்கு எதிராக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>மறு விசாரணை</u>

இல்லை

Sd/– C.Kathiravan,
IV Additional Sessions Judge,
Tirunelveli.